முருகப்பெருமான் துணை

**மகான் கதம்பமகரிஷி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.10.2022, புதன்கிழமை

1. அவதார ஞான வள்ளலே
அன்னதான சக்திமிகு அண்ணலே
அவனியில் உன் பெருமை கூறி
அரங்கனே அனுகூல ஆசிதனை
2. ஆசிதனை சுபகிருது தரிவை திங்கள்
அய்யைந்து திகதி கணக்கன் வாரம்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 25 ம் நாள் 12.10.2022, புதன்கிழமை)
ஆசிதனை கதம்பமகரிஷி தானும்
அருளுவேன் அரங்கமகான் அனுகூலம்
3. அனுகூலம் உலகோர் பெற்று
ஆனந்த ஞான வாழ்வு பெற
ஞானமுடன் நல்வினை கூட்டிட
நல்ல தரும வழிகாட்டும் ஞானி
4. ஞானியரின் அருளும் ஆசியும்
நாட்டிடுவேன் அடைந்து உயர
இனியும் காலம் கடத்தாமல்
இணைந்து அரங்கன் குடிலுக்கு வந்து
5. வந்துமே முருகா அரங்கா என
வணங்கி ஆசி தீட்சை தனை
சிந்தைபட ஏற்று சரணாகதி
செப்பிடுவேன் கொண்டு வர
6. வருகவே அரங்கனாக அருளும்
வடிவேலனாரின் சூட்சுமம் தனை
பேருலகில் கண்டு உலகோர்
புகலுவேன் வரங்கள் பலவாற்
7. பலவாற் ஞான சக்திகளாகக்கிட்டி
பாருலகை மாற்றும் ஞானவான்களாக
பலம்கூடி உலகை மாற்றும்
பரிபக்குவம் நிறைந்த ஞானிகளாக
8. ஆகவே ஆற்றல் கூடி
அரங்கனின் தலைமை ஏற்ற
மகான்களாக உலகோர் சிறந்து
மண்ணுலகை அரங்கன் அவதார
9. அவதார நோக்கமான வகையில்
அறிவிப்பேன் ஞானயுகமாற்றம்
அவனியில் செய்து நன்கு
ஆறுமுகனார் ஞான ஆட்சிபடைப்பர்

10. படைக்கவே கலியின் துன்பங்கள்
படுபாதகச் செயல்களெல்லாம்
தடையின்றி உலகை விட்டு நீங்கி
தருமம் நீதி உண்மை எனும் அணிகலன்

11. அணிகலன் கொண்ட ஆளுமையாக
ஆபத்து இல்லா உலகாக மாறும்
துணிவு கொண்டு அரங்கன் வழிவர
துன்பமில்லா ஞானவாழ்வு பெறுவர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–